HSBC Mutual Fund


# நீங்கள் இதுவரை வரிப் பிடித்தத்திற்காக வேலை செய்துள்ளீர்கள். இப்போது அதை உங்களுக்காக வேலை செய்ய வைக்கலாம்.



ELSS என்பது 3 ஆண்டுகள் கட்டாய முடக்கு காலம் மற்றும் வரிச் சலுகை கொண்ட ஓர் திறந்த நிலை ஈக்விட்டி தொடர்புடைய சேமிப்புத் திட்டம் ஆகும். இது ஈக்விட்டிகளின் வளர்ச்சித் திறன் மூலம் ஒரே நேரத்தில் வரியைச் சேமிக்கவும் செல்வத்தை உருவாக்கவும் சிறந்த வழியாகும்.


வரி சேமிப்பு வழிமுறையைப் பயன்படுத்தும் ஒரு நபர் மற்றும் அதனைப் பயன்படுத்தாத மற்றொருவர், இந்த இரு முதலீட்டாளர்களை பற்றியும் பார்ப்போம். திரு. B மாதந்தோறும் தான் வரியாகச் செலுத்தும் தொகையை ELSS -இல் முதலீடு செய்கிறார். மறுபுறம் திரு. A வரி சேமிப்பு இல்லாத முதலீட்டைச் செய்கிறார்.

**திரு. A**



**வரி சேமிப்பு இல்லாத முதலீடுகளைச் செய்கிறார்**

**திரு. B**



**வருமான வரிச் சட்டம் 80C -இன் கீழ் வரிச் சேமிப்புடைய ELSS -இல் முதலீடு செய்கிறார்**

10%* ஆண்டு ரிட்டன் விகிதத்தில் SIP

| திரு. A | | திரு. B |
|---|---|---|
| ரூ. 5,000 | மாதாந்திர முதலீடு | ரூ. 5,000 |
| Nil | வரி சேமிப்பிலிருந்து கூடுதல் முதலீட்டிற்கான சாத்தியம்^ | ரூ. 1,500 |
| ரூ. 5,000 | மொத்த மாதாந்திர முதலீடு | ரூ. 6,500 |
| ரூ. 62 இலட்சம் | 25 ஆண்டுகளுக்குப் பிறகு | ரூ. 80 இலட்சம் |

குறிப்பு: ELSS -இல் SIP செய்வது ஒவ்வொரு முதலீட்டுத் தவணையின் உங்கள் முதலீட்டை முடக்கி வைக்கும் (அதாவது 3 ஆண்டுகளுக்கு)

இதன் நோக்கம் விளக்கத்திற்காக மட்டுமே. கணக்கீடுகள் உத்தேச வருவாய் விகிதத்தின் அடிப்படையில் உள்ளன, உங்கள் முதலீடுகளின் உண்மையான வருவாய் இந்த விளக்கத்தில் உள்ளதை விட கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். *CAGR –இல் எல்லா தொகைகளும் முழு எண்களாக்கப்பட்டுள்ளன. வரி விகிதம் 30% எனக் கருதப்பட்டுள்ளது. வரியில் சேமிக்கப்பட்ட தொகை அதே வட்டி விகிதத்தில் மீண்டும் முதலீடு செய்ததாகக் கருதப்படுகிறது. முதலீட்டாளர் முதலீடு செய்த முழுத் தொகையிலும் வரிச் சலுகை பெற்றதாகக் கருதப்பட்டு இந்த கணக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. ^30% வரி வகையைக் கருதும் போது, ஒருவர் ரூ. 60,000 மொத்த ஆண்டு முதலீட்டில் ரூ. 18,000 வரை வரியைச் சேமிக்க முடியும். சேமிக்கப்பட்ட ரூ. 1,500 மாதாந்திரத் தொகையானது கூடுதல் மாதாந்திர முதலீடு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்த தயாரிப்பு தங்களுக்குப் பொருத்தமானதாக இருக்குமா என்று சந்தேகமிருப்பின் முதலீட்டாளர்கள் தங்களின் நிதி ஆலோசகர் / வரி ஆலோசகரை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இதன் மூலம், நீங்கள் எவ்வளவு வரியைச் சேமிக்கிறீர்களோ, அவ்வளவு தொகையை உங்கள் நீண்ட காலச் சேமிப்பை உருவாக்குவதற்கு முதலீடு செய்ய முடியும் என்பதைக் காணலாம்.**

**www.assetmanagement.hsbc.co.in**

Follow us on

HSBC மியூச்சுவல் ஃபண்ட்டின் முதலீட்டாளர்கள் கல்வியறிவு மற்றும் விழிப்புணர்வு முயற்சி

ஒருமுறைச் செயல்பாடான உங்கள் வாடிக்கையாளரை அறியுங்கள் (KYC) செயல்முறை, புகார் தீர்வு செயல்முறை மற்றும் SEBI SCORES (https://www.scores.gov.in) உள்ளிட்டவை குறித்து அறிய https://tinyurl.com/yfchd477-ஐப் பார்க்கவும். முதலீட்டாளர்கள் SEBI இணையத்தளத்தில் இண்டர்மீடியரிஸ்/சந்தை கட்டமைப்பு நிறுவனங்களின் (https://www.sebi.gov.in/intermediaries.html) கீழ் சரிபார்க்கப்பட்டிருக்கும் பதிவு செய்யப்பட்ட மியூச்சுவல் பண்டுகளை மட்டுமே கையாள வேண்டும். முதலீட்டாளர்கள் HSBC மியூச்சுவல் பண்டினால் மேற்கொள்ளப்பட்டுள்ள 'முதலீட்டாளர் கல்வி மற்றும் விழிப்புணர்வு' முன்னெடுப்புகள் அனைத்தையும் HSBC மியூச்சுவல் பண்ட் வலைத்தளத்தில் 'முதலீட்டாளர் கல்வி' பிரிவின் கீழ் பார்க்கலாம்.

இந்த ஆவணம் இந்திய அதிகார சட்ட எல்லைக்குள் மட்டுமே விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்டது. இந்த ஆவணம் மற்றும் HSBC மியூச்சுவல் ஃபண்ட் யூனிட்கள் ஆகிய இரண்டுமே வேறு எந்த நாட்டின் பங்குச்சந்தை சட்டங்கள் / கட்டுப்பாடுகளின் கீழ் பதிவு செய்யப்படவில்லை. சில அதிகார சட்ட எல்லைகளில் இந்த ஆவணம் விநியோகம் செய்யப்படுவது சட்டவிரோதமானதாக அல்லது கட்டுப்படுத்தப்பட்டதாக அல்லது முற்றிலும் தடைசெய்யப்பட்டதாக இருக்கலாம், அதன்படி, இந்த ஆவணத்தை வைத்திருக்கும் நபர்கள் அத்தகைய கட்டுப்பாடுகள் குறித்து அறிந்திருக்க வேண்டும் மற்றும் கடைப்பிடிக்க வேண்டும். இந்தியாவைத் தவிர வேறு அதிகார சட்ட எல்லை வரம்பில் இருந்து இந்த ஆவணத்தை அணுகுவதற்கு யாரேனும் ஒருவர் தேர்வுசெய்தால், அத்தகைய நபர் தனது சொந்த ஆபத்தில் அவ்வாறு செய்கிறார் மற்றும் அதன் விளைவுகளை எதிர்கொள்கிறார் மேலும் HSBC மற்றும் அதன் குழும நிறுவனங்கள் உள்ளூர் சட்டம் அல்லது ஒழுங்குமுறை மீறலுக்குப் பொறுப்பேற்காது.

**மியூச்சுவல் முதலீடுகள் சந்தை திட்ட அபாயங்களுக்கு உட்பட்டது. திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.**

CL720